**CC.No.666/2025 (JM.No.II, DHARMAPURI)**

**22.05.2026**

**சாட்சிக்கு சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டது. (எதிரி ஆஜர்)**

**PW–7: திரு.M.ராமகிருஷ்ணன், சிறப்பு காவல் உதவி ஆய்வாளர்**

**முதல் விசாரணை**

நான் தற்போது சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக தொப்பூர் காவல் நிலையத்தில் பணிபுரிந்து வருகிறேன். உதவி காவல் ஆய்வாளர் திரு.பிரபாகரன் என்பவரின் கையெழுத்து நன்கு தெரியும் என்பதால் நான் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 09.03.2024ம் வருடம் 15.30 மணிக்கு தொப்பூர் காவல் உதவி ஆய்வாளர் திரு.சரவணன் என்பவர் நிலைய பணியில் இருந்த போது 08.03.2024 தேதி அதிகாலை தருமபுரி அரசு மருத்துவமனையில் இருந்து கிடைத்த தகவலின் பேரில் முதல்நிலை காவலர் பாண்டியன் என்பவர் அரசு மருத்துவமனைக்கு சென்று அடிதடி சிகிச்சையில் இருந்த அம்பிகா என்பவரை 14.00 மணிக்கு விசாரித்து மனு ரசீது எண்.181/2024 வழங்கப்பட்டு விசாரணை செய்து எதிரி புள்ளையாகவுண்டர் மீது குற்ற வழக்கு எண்.70/2024, இதச பிரிவு 294பி, 324 மற்றும் 506(2) கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார். முதல் தகவல் அறிக்கை சம்பந்தபட்ட ஆவணங்களை குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2, தருமபுரி அவர்களுக்கு அனுப்பியும், சம்பந்தபட்ட பிற ஆவணங்களை எங்களுடைய உயர் அதிகாரிகளுக்கு அனுப்பியும், வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்து கொண்டு 09.03.2024 தேதி மதியம் 17.30 மணிக்கு சம்பவயிடம் சென்று சம்பவயிட சாட்சிகளான முனிராஜ், செல்வி ஆகியோர்கள் முன்னிலையில் மாதிரி வரைபடம் வரைந்து பார்வை மகஜர் தயார் செய்தார். பின்பு வழக்கின் சாட்சிகளான அம்பிகா, சேட்டு, மணி, செல்வம், முனிராஜ், செல்வி ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தார். அவருடைய புலன் விசாரணையின் அடிப்படையிலும், மேற்கண்ட சாட்சிகளின் அடிப்படையிலும் சம்பவம் உண்மை என தெரிய வந்ததால் எதிரியை 35(3)(4) BNSS நிலையத்தில் ஆஜராக செய்து, நிலைய பிணையில் விடுவித்தார். பின்பு வழக்கில் காயப்பட்ட அம்பிகாவிற்கு சிகிச்சை அளித்த மருத்துவர் சுகந்தி என்பவரை விசாரித்து காயச்சான்றிதழ் பெற்றார். புலன் விசாரணையை முடித்துக்கொண்டு 04.04.2025ஆம் வருடம் எதிரி புள்ளையாகவுண்டர் மீது 294பி, 324, 506(2) ஆக இறுதி அறிக்கை தாக்கல் செய்தார். அந்த புகார் வாக்குமூலம் **அ.சா.ஆ.4,** முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.5,** மாதிரி வரைபடம் **அ.சா.ஆ.6,** பார்வை மகஜர் **அ.சா.ஆ.7,** அம்பிகாவின் காயச் சான்றிதழ் **அ.சா.ஆ.8,** மனு ரசீது எண்.181/2024 **அ.சா.ஆ.9** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**எதிரிதரப்பில் குறுக்குவிசாரணை**

புகார்தாரருக்கு எதிரிக்கும் இடையே உள்ள முன்விரோதத்தின் அடிப்படையில் கொடுத்த தவறான புகாரை சரிவர புலன் விசாரணை செய்யாமல் தவறான இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரி தாக்கியதால் ஏற்பட்ட காயத்தில் புகார்தாரர் மருத்துவமனையில் அனுமதிக்கப்படவில்லை என்றாலும், அவர் தன்னிச்சையாக காயத்தை ஏற்படுத்தி கொண்டார் என்றால் சரியல்ல. சொன்ன விதத்தில், சொன்ன நேரத்தில் சம்பவயிடத்திற்கு செல்லாமல், ஆவணங்கள் அனைத்து

காவல் நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

SUSHMITHA RAJAMANICKAM

Digitally signed by SUSHMITHA RAJAMANICKAM
Date: 2026.05.22 17:08:39 +0530